Arimaa Nokku
14: 4 சனவரி 2021

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
14 : 4 சனவரி 2021

நவீன தமிழ்க் கவிதைகளின் மனிதமயமாக்கல் பண்பு
- *தெ. வெற்றிச்செல்வன்* 05
Racial Society in Paule Marshall's The Chosen Place, the Timeless People
- T. Ezhilarasi 09
முதுமொழிக்காஞ்சி: ஒரு வாழ்வியல் பெட்டகம்
- *தா. நா. பாலு & வே. பாலாஜி* 11
Manifestation of Socio-Political Realities of India in Rohinton Mistry's *A Fine Balance:* A Study
- A. Umar Farook & A. Mohamed Mustafa 15
திருமூலர் திருமந்திரம் பஞ்சாட்சர தீபம் உரைத்திறன்
- *ம. தனப்பிரியா* 18
திருக்குறள் யாப்பு: யாப்பருங்கல விருத்தி உரை
- *ப. திருஞானசம்பந்தம்* 23
நற்றிணைப் பதிப்புகளில் பாடவேறுபாடு
- *இரா. தேவி* 29
புறநானூற்று மூல ஆய்வு (சுவடி எண் 440)
- *செ. சிபிவெங்கட்ராமன்* 33
போதைமலைப் பழங்குடிகளின் பழக்கவழக்கங்கள்
- *ரேகா. வே* 37
Reading Evil: Philosophical Insights into the problem of Evil in William Golding's Lord of the Flies
- G. Naresh & R. Kumaran 41
சித்தர்கள் வாக்கும் வாழ்வும்
- *ம. ஏ. கிருட்டிணகுமார்* 44
சங்கப் பாட்ல்கள்வழிப் புலப்படும் இசைக்குறிப்புகள்
- *இரா. வெங்கடேசன்* 48
சங்ககால மொழிப் பயன்பாடு
- *க. விஜயகாந்த்* 52
குறுந்தொகையில் மண்டில யாப்பு
- *அ. மோகனா* 57

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## பிறப்பும் இறப்பும்

பிறப்பும் இறப்பும் சொல்லளவிலும் நெருக்கமானவை. பிறப்பின் முன்னெழுத்து உயிர்நீங்கின் இறப்பாகிவிடுகிறது. தூக்கமும் விழிப்பும்கூட வெகுதொலைவில் விலகியிருப்பன அல்ல. உறங்குவது போலத்தான் சாவதும். உறங்கியவர் விழிப்பதுபோலத்தான் பிறப் பதும் என்பார் திருவள்ளுவர்.

துஞ்சுதல் என்னும் தமிழ்ச் சொல் தூங்குதலையும் மரணித் தலையும் குறிக்கும் சொல்லாக நாம் காண்கிறோம். ஜான் கிளேர் எனும் ஆங்கிலக் கவிஞன் 'குழந்தைகளே மரணத் தின் தொட்டில்கள் என்றும் மரணம்தான் மனிதனைக் குழந் தைமைப் பருவத்திலிருந்து வளர்த்தெடுக்கிறது' என்றும் பாடுவான்.

ஜப்பானியர்கள் மரணத்தை வகைமைப்படுத்தி வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடுவார்கள். ஜப்பானியப் பண்பாட்டையே மரணப் பண்பாடு **(Death Culture)** என்றும் சொல்லும் மரபு உண்டு.

அண்மைய காலத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி மனித குலத்தைச் சூறையாடிவரும் கொடுந்தொற்றால் வாழ்க்கை யும் மதிப்பிழந்துபோனது. மரணமும் மதிப்பிழந்துபோனது.

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டவர் மீண்டால் பெரு மகிழ்ச்சிதான். நம்மோடு அவர் வாழத் திரும்பியதைக் கொண்டாடுவோம். ஆனால், நுரையீரல் தாக்குதலுக்கு உள் ளாகி இயற்கையாய் மூச்சுவிட முடியாத் துயரில் போராடிச் செயற்கை மூச்சுத் தயவில் தத்தளித்து யாக்கை அகத்த தாயும் புறத்ததாயும் உயிர் ஊசலாடி மெல்லமெல்ல நினைவு களில் முடிச்சுகள் விழுந்து முடிந்துபோகிறவர் வாழ்ந்த வாழ் வெல்லாம் ஒரு மதிப்பும் இல்லாமல் மூடப்பட்ட கெட்ட சரக்காகி எங்கோ குழியில் கொட்டப்படுகிறார்; எரியில் வீசப் படுகிறார். அவருக்கு வாழ்க்கை இழைக்காத கேவலத்தை மரணம் இழைத்துவிடுகிறது.

அவர் கடைசி இதயத் துடிப்புகளில் யார் முகம் இருந் ததோ? யாருடைய கைகளைப் பிடித்துக்கொள்ளத் துடித் திருப்பாரோ? என்ன சொல்ல நினைத்திருப்பாரோ? வீட்டுக் குத் திரும்ப இனி வாய்ப்பில்லை என்று தெரிந்த நேரத்

ISSN 2320-4842

திற்குப் பிறகான நேரத்தில் என்ன துயரம் அவரைக் கவ்வியதோ?

அவ்வாறேதான் தந்தை வந்துவிடுவார்; தாய் மீண்டு விடுவார் என்று வலுக் குறைந்த நம்பிக்கைகளில் தவித்தவர்கள்; கணவர் திரும்பிவிடுவார் என்றும், மனைவி நினைவாகவே இருப்புக் கொள்ளாமல் கைப்பேசிக் குரலுக்குக் காத்துக் கண்ணீர்மடை திறந்தவர்கள் இக்காலக் கட்டத்தின் அவல அடையாளங்கள்.

பணம், பதவி, அதிகாரம், சிறப்பு, செருக்கு எல்லாம் வாழ்வை ஆட்டிப்படைக்கலாம். தொற்றும் மரணமும் எதற்கும் பணிவதிலை. எதற்கும் அஞ்சுவதுமில்லை. தொற்றைத் தொலைப்போம். தொற்றுமூலம் கற்றதை வாழ்வில் விதைப்போம்

❖

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
❖
*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்
❖
*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
❖
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள்.
பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்
❖
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
❖

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3500/- | US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US | $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10,000/- | US | $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US | $ 700 |

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |